# A. அனுபந்தம்

## (3) (1) (விதியைப் பார்க்கவும்)

டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டிகளைக் குறித்த (சென்னை 1920-ம் வருடத்து 5வது சட்டமாகிய) 1920-ம் வருடத்திய சென்னை பட்டணத்துச் சட்டத்தில் கண்ட (சந்தர்ப்பத்துக்கேற்றபடி 197, 204, 208, 213 அல்லது 215-வது பிரிவு) பிரிவுகளின் படிக்கான விண்ணப்பம்.

(1912-ம் வருடத்திய மாற்றி அமைக்கப்பட்ட கட்டிட விதிகளின் 3-வது விதி

தேதி ..................................................

இன்னாரிடமென்பது

சொந்தக்காரரின் பெயர் ..........................................................................................................

விலாசம் ..........................................................................................................................

.............................................................................. தொலைபேசி எண் : .......................................

## நகராட்சி ஆணையர்

### புளியங்குடி

ஐயா,

(சந்தர்ப்பத்துக்கேற்றபடி 197, 204, 208, 213 அல்லது 215-வது பிரிவு) ........................................ வது பிரிவிலும் 1942-ம் வருஷத்திய மாற்றியமைக்கப்பட்ட கட்டிட விதிகளின் 3-வது விதியிலும் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து ...................... வார்டு அல்லது டிவிஷனிலே ............................ என்னும் பெயருள்ள தெரு அல்லது ரஸ்தா ..................ம் டவுன் அல்லது ரெவினியு சர்வே நம்பருள்ள மனையிலே அல்லது நிலத்துண்டிலே, குடிசையல்லாத வேறு ஒரு கட்டிடத்தைக் கட்ட / புதுப்பிக்க / மாற்ற அல்லது அதனுடன் சில பாகங்களைச் சேர்க்க நான் உத்தேசித்திருக்கிறேன். நான் அடியிற்கண்டவைகளை இரட்டைப் பிரதியாக இதனுடன் அனுப்புகிறேன்.

**(a)** எந்த நிலத்தின் பேரில் ஷ கட்டிடம் கட்டப்போகிறாரோ / புதுப்பிக்கப்படப் போகிறதோ / மாற்றப்படப்போகிறதோ அல்லது சேர்க்கப்படப்போகிறதோ அந்த நிலத்தின் மனையினுடைய நக்ஷா/ (இது இவ்விதிகளின் B அனுபந்தத்தில் சொல்லியிருப்பவைகளை அனுசரிக்க வேண்டும்.

**(b)** பூமியின் நக்ஷாவையும், தரை, ஏற்றங்கள், குறுக்கு வெட்டுத் தோற்றங்கள் ஆகிய இவை ஒவ்வொன்றின் நக்ஷாவையும் காட்டும் ஷ கட்டிடத்தின் ஒரு நக்ஷா அல்லது நக்ஷாக்கள் (இது / இவை இவ்விதிகளின் C அனுபந்தத்தில் சொல்லியிருப்பவைகளை அனுசரித்திருக்க வேண்டும்.) ;மேலும்

**(c)** பிரஸ்தாப கட்டு வேலையின் விவரக் குறிப்புப் படம் (இது இவ்விதிகளின் D அனுபந்தத்தில் சொல்லியிருப்பவைகளை அனுசரித்திருக்க வேண்டும்.)

ஷ கட்டிடத்தைக் குடியிருப்பு வீடாக மாத்திரமே / குடியிருப்பு வீடாக அல்லாமல் காரியத்திற்காக உபயோகிக்க எண்ணியிருக்கிறேன்.

ஷ மனையை அங்கீகரித்து ஷ கட்டு வேலையை நிறைவேற்ற அனுமதி கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்

| | |
|---|---|
| லைசென்ஸ் பெற்ற சர்வேயர் கையெழுத்து | நிலம், கட்டிடம் ஆகிய இவைகளின் சொந்தக்காரருடைய கையெழுத்து |

த.தி.பா

# திட்டங்கள்

(i) டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டிகளைக் குறித்த 1920-ம் வருடத்திய சென்னைப்பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 200- வது பிரிவின்படி நிர்வாக அதிகாரி அங்கீகாரம் தெரிவிக்கிற வரையில் அல்லது 201-வது அல்லது 210 வது பிரிவின்படி கூடி அதிகாரியாவது சந்தர்ப்பத்துக்கேற்றபடி 202- வது அல்லது 211 வது பிரிவின்படி முனிசிபல் கௌன்ஸிலாவது அனுமதி கொடுக்கின்றவரையில் நான் கூடி வேலையை நிறைவேற்றத் தொடங்க மாட்டேன் என்று உடன்படுகிறேன்.

(ii) அங்கீகரிக்கப்பட்டிருக்கும் மனை நக்ஷாவையும் கட்டிட நக்ஷாவையும் விவரக்குறிப்புப் படங்களையும் அனுசரித்ததன்றி மற்றபடியாவது, டிஸ்ட்ரிக் முனிசிபாலிட்டிகளைக் குறித்த 1920 ம் வருடத்திய சென்னை பட்டணத்துச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளில் எதற்காகிலும், அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாய சட்டம் உத்தரவு அல்லது இதர பிரகடனத்துக்காகிலும், கூடி சட்டம் விதிகள் அல்லது சகாயச் சட்டங்களின்படி நியாயமாய்ப் பிறப்பிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட யாதொரு கட்டளை அல்லது உத்தரவுக்காகிலும் விரோதமாகவாவது நான் எக்காரியத்தையும் செய்யமாட்டேன் என்று உடன்படுகிறேன்.

(iii) டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டிகளைக் குறித்த 1920 ம் வருடத்திய சென்னை பட்டணத்து சட்டத்திலே சந்தர்ப்பத்துக்கேற்றபடி 205 வது பிரிவின்படியாவது, 216 வது பிரிவின்படியாவது 216வது பிரிவின்படியாவது நிர்வாக அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோட்டீஸாகிலும் அவரால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட யாதொரு உத்தரவிலாகிலும் சொல்லியிருக்கக்கூடிய எவையேனும் மாறுதல்களைச் செய்ய நான் உடன்படுகிறேன்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட மனை நக்ஷாவிற்கு ஒரு பிரதியையும், கட்டிடத்தின் அனுமதிக்கப்பட்ட நக்ஷாக்களுக்கு ஒரு தொகுதி பிரதிகளையும், வேலை நடந்தேறிக் கொண்டிருக்கும் பொழுது எல்லாக் காலங்களிலும் கட்டிட மனையில் வைத்திருக்க நான் உடன்படுகிறேன். மேலும் நிர்வாக அதிகாரியாவது இது விஷயமாய் அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள யாதொரு உத்தியோகஸ்தராவது பார்வையிடுவதற்காக எல்லாக் காலங்களிலும் கூடி நக்ஷாக்கள் கிடைக்கக்கூடிய கூடி கட்டிடம் திறந்திருக்கும்படியும் பார்த்துக்கொள்ள நான் உடன்படுகிறேன்.

(v) டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டிகளைக் குறித்த 1920 வருடத்திய சென்னை பட்டணத்துச் சட்டத்தின் 89-வது பிரிவின் பிரகாரம் நிர்வாக அதிகாரிக்கு நோட்டீஸ் கொடுக்கவும், கட்டிடம் பூர்த்தியாவது அல்லது அனுபோகத்திற்கு வருவது ஆகிய இவைகளில் எது முன்னதாக நிகழ்கிறதோ அதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் பூர்த்தியானதைப்பற்றிய நக்ஷாக்களின் தொகுதி ஒன்றைச் சவதரிக்கவும் நான் உடன்படுகிறேன்.

(vi) பொதுஜனச் சுகாதாரத்தைக் குறித்த 1939ம் வருடத்திய சென்னை பட்டணத்துச் சட்டத்தின் 26-வது 33-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிற பிரகாரம் இந்த முனிசிபாலிட்டியைச் சேர்ந்த பொதுஜன சுகாதார இலாக்கா உத்தியோகஸ்தர் ஒருவரிடமிருந்து நான் ஓர் உறுதிமொழிப்பத்திரம் பெற்றுக்கொண்டாகிற வரையில் என்னால் கட்டப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் கட்டிடத்தை நான் அனுபோகத்தில் வைத்துக்கொள்ளவும் மாட்டேன். அல்லது அதை பிறர் அனுபோகத்தில் வைத்துக்கொள்ளும்படிச் செய்யவும் மாட்டேன் அல்லது வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கவும் மாட்டேன் என்றுங்கூட நான் உடன்படுகிறேன்.

<u>கட்டிடத்திறுடைய சொந்தக்காரரின் கையெழுத்து</u>